இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

## YESUVAI THINAM PARKIREN


Vol : 26
Issue : 04

APRIL 2026

ஆண்டு சந்தா : 100/-
தனிப்பிரதி : 10/-





இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது DIGITAL முறையில் நம்முடைய இணையதளத்திலும்

**WWW.JESUSLIVES.IN**

வானத்தின் வாசலில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

ஏப்ரல்
**10,11**
வெள்ளி, சனி

காலை 9.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை

**வானத்தின் வாசல் சுவிசேஷ மையம்**

செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

தொடர்புக்கு:
94428 00449, 94980 00449



EVG. L. வின்சென்ட்ராஜ்



EVG. கலா வின்சென்ட்ராஜ்

# ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா

One soul at a time



1 மணித்துளி
1 ஆத்துமா
1 ரூபாய்

- இந்த உன்னதமான சுவிசேஷ ஊழிய திட்டத்தில் எங்களோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்!
- ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா என்றால் ஒரு மாதத்திற்கு 744 மணி நேரம்
- மாதந்தோறும் உங்களால் முடிந்த ஆத்துமாக்களை இந்த கடைசி கால சுவிசேஷப் பணியில் தாங்க முன் வாருங்கள்.

இணையதளம் மூலமாக தாங்கிட


**G-PAY 9443009333**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்றவர், இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார், அவர் வாழ்கிறார். அவர்தான் இந்த பூமியில் வாழுகின்ற நமக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.

கடந்த நாட்களில் பிப்ரவரி 27, 28 மார்ச் 1 தேதிகளில் காங்கேயத்திலும், மார்ச் 6,7,8 தேதிகளில் கோவை சி.எஸ்.ஐ தூய இம்மானுவேல் ஆலயத்திலும் நடைபெற்ற கூட்டங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். ஜனங்கள் தொடப்பட்டார்கள், உயிர்ப்பிக்கப்பட்டார்கள், அனல் மூட்டப்பட்டார்கள். தொடர்ந்து செம்பட்டி வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்திலும், மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்திலும் தேவன் மகிமையாய் இறங்கி நடத்துகிறார். ஏப்ரல் மாதம் முழுவதும் பல இடங்களில் கூட்டங்கள் ஒழுங்காகி இருக்கிறது. ஏப்ரல் 30 மே 1,2 தேதிகளில் மூன்று நாட்கள் சுவிசேஷ எழுப்புதல் ஜெபமுகாம் நடைபெறுகிறது. இதிலே கர்த்தருக்காக வாழ வேண்டும், ஊழியம் செய்ய வேண்டும் என்று இருக்கிறவர்கள் கட்டாயம் கலந்து கொள்ள இயேசுவின் நாமத்தில் உங்களை அழைக்கிறோம். வெளியூர்களிலிருந்து வருகிறவர்கள் தங்குவதற்கும், உணவிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு நீங்கள் இப்பொழுதே முன்பதிவு செய்து இந்த விடுமுறை நாட்களை தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள, தேவபிரசன்னத்தில் இணைந்திருக்க அன்போடு அழைக்கிறோம்.

தொடர்ந்து நம்முடைய ஊழியத்திற்கு தகுந்த உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள், பத்திரிக்கை ஊழியம், மீடியா ஊழியம் எல்லாம் சரியாய் நடைபெறவும், கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இந்த மாத இதழ் உங்கள் கரங்களில் கிடைக்கும் போது ஆஸ்திரேலியா ஊழியத்தை முடித்து திரும்பி இருப்பேன். ஏப்ரல் 18ஆம் தேதி மூன்றாவது சனிக்கிழமை மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு விசேஷித்த செய்தியாளராக சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள் வருகிறார்கள். இந்த ஜெபத்தில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள், மற்றவர்களுக்கும் இதைக்குறித்து சொல்லி அவர்களையும் அழைத்து வாருங்கள். தொடர்ந்து உங்கள் ஜெபத்தாலும், உதாரத்துவமான காணிக்கையினாலும் ஊழியத்தை தாங்குங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக!



இயேசுவின் பணியில்

L. Vincentraj

(சகோ. L. வின்செண்ட்ராஜ்)



சகோ. L. வின்சென்ட்ராஜ்

# நீங்கள் கர்த்தருடைய தோட்டம்

**கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார், அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப் போலவும், அதின் அவாந்தர வெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார். ஏசாயா 51:3.**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு ஆண்டவராகிய தேவனை நேசிக்கிற ஒரு தேவப்பிள்ளை யார்? எப்படி இருப்பார்கள்? என்பதை பற்றி இந்த வேத வசனங்களில் தேவன் தெளிவாக சொல்லி இருக்கிறார். தேவன் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில், இருதயத்தில் வரும் போது அந்த மனிதனுடைய வெறுமையான வாழ்க்கை, வனாந்தரமான வாழ்க்கை, ஒரு செழிப்புள்ள வாழ்க்கையாக, ஒரு தோட்டத்தைப் போல, பூக்களால், கனிகளால், வாசனையால் நிறைந்து இருக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. தேவன் உலாவுகிற, நடமாடுகிற அநேக இடங்களில் ஒன்று ஏதேன் தோட்டம். அந்தத் தோட்டத்தில், தான் உண்டாக்கின, சிருஷ்டித்த மனிதனை தேவன் வைத்தார். அவன் தன்னை விட்டு தூரமாகவோ, கண்ணுக்கு எட்டாத இடத்திலோ இருக்கக் கூடாது. தன் பார்வையில், தனக்கு முன்பாக, தன்னுடைய கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்று தான் தேவன் அங்கே வைத்தார். ஒரு காலத்தில் அந்த இடத்தில் தேவதூதர்களின் தலைவனாக இருந்த லூசிபர் அங்கே தான் இருந்தான். அவன் துரத்தப்பட்டு, நீக்கப்பட்டு, கீழே விழுந்த போது அந்த இடத்தில் மனிதனை வைத்தார். எசேக்கியேல் 28:13-ஐ பாருங்கள் **நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்** என்று சொல்லப்பட்டுள்ளது.

அந்தத் தோட்டத்தில் தான் ஆதாமையும், ஏவாளையும் வைத்து பராமரித்து, பாதுகாத்து தன்னோடு இருக்கவும், தன் சத்தத்தை கேட்கவும், உலாவவும் அவர்களை அங்கே வைத்தார். எவ்வளவு ஒரு அருமையான இடம். வெயிலோ, உஷ்ணமோ, குளிர்ச்சியோ, இரவோ, பகலோ, பசியோ, மரணமோ, வேதனையோ இல்லாத இடம். அந்த இடத்தில் தேவன் ஆதாமையும், ஏவாளையும் வைத்தார். அப்படி வைத்து பகலின் குளிர்ச்சியான வேளையிலும், அவர்களோடு ஒவ்வொரு மாலை வேளைகளிலும் பேசுவார். அவர்கள் தேவனுடைய சத்தத்தை கேட்பார்கள். இதைத்தான் **ஆதி 3:8 சொல்லுகிறது தோட்டத்தில் உலாவுகிறவருடைய சத்தத்தை கேட்டார்கள்.** ஆம் அவருடைய சத்தத்தை கேட்கவும், சித்தத்தை

செய்யவும் தான் தேவன் அவர்களை அந்த தோட்டத்தில் வைத்தார். அதோடு கூட அவர்கள் பாதுகாப்பிற்காக ஒரு கட்டளையை வைத்தார். அவருடைய ஆளுகைக்குள், கண்ட்ரோலில் பாதுகாப்பாக இருக்க தேவன் அங்கு வைத்தார். **ஆதி 2:15ல் நீங்கள் எல்லா மரத்தின் கனிகளை புசிக்கலாம். ஆனால் நன்மை தீமை அறியத்தக்க கனியை நீங்கள் சாப்பிட வேண்டாம் என்றார்.** இந்தத் தோட்டத்தை காக்கவும், பண்படுத்தவும் உங்களை ஏற்படுத்தினேன் என்றார். ஆனால் ஆதாமும் ஏவாளும் அந்த கட்டளையை அசட்டைபண்ணி, புறக்கணித்து, மீறி சாத்தானுக்கு இடம் கொடுத்து, அந்தத் தோட்டத்தினுடைய மகிமையை அசட்டை பண்ணவும், கெடுக்கவும் ஆரம்பித்தார்கள்.

வேதம் சொல்லுகிறது **உன் 1:6-ல் என்னை திராட்சைத் தோட்டத்திற்கு காவலாளியாக வைத்தார்கள் என் சொந்த தோட்டத்தையோ நான் காக்கவில்லை.** காட்டுப்பன்றிகள் மேயவும், சிறுநரிகள், குழிநரிகள் சேதப்படுத்தவும், கண்டும் காணாதவர்களைப் போலவும் இருந்துவிட்டேன் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆம் சாத்தானுடைய வேலையே குள்ளநரி வேலைதான். கெடுத்து அழிப்பது தான். அப்படிப்பட்ட அந்த தோட்டத்தை காக்காமல் அதை வனாந்தரமாக்கி, வெறுமையாக்கி, கள்ளர் குகையாக்கி, தேவன் உலாவ முடியாமல், அசைவாட முடியாமல் வனாந்தரமாக்கி விட்டார்கள். ஆகவே தான் **ஏசாயா 14:17-ல் உலகத்தை வனாந்தரமாக்கி அதின் நகரங்களை அழித்து சிறைப்பட்டவர்களை தங்கள் வீடுகளுக்குப் போகாவிடாமலிருந்தவன் என்பார்கள்,** தேவ பிரசன்னத்தை, வீட்டை, கர்த்தரின் தோட்டத்தை சூறையாடினான். அதனால் தேவன் பார்த்தார் இனி அவர்கள் இந்த தோட்டத்தை கெடுப்பதை, அழிப்பதை நான் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று தேவனாகிய கர்த்தர் **ஆதி 3:23-ல் சொல்லப்பட்டுள்ளபடி அவன் எடுக்கப்பட்ட மண்ணை பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பி விட்டார்.**

இனி இங்கு இருக்க முடியாது, வாழ முடியாது, ஒரே இடத்தில் ஒளியும் இருளும் இருக்க முடியாது என்று, அவர்களை தன்னுடைய பிரசன்னத்தை விட்டுப் பிரித்து வைத்துவிட்டார். அன்றோடு மனிதர்களுடைய ஏதேன் தோட்ட வாழ்க்கை முடிந்தது. அவர்கள் கர்த்தரின் தோட்டத்தை இழந்தார்கள். இப்பொழுது அவர்கள் பூமியிலேயே அதேபோல் ஒரு தோட்டத்தை ஏற்படுத்தவும், பண்படுத்தவும், கனி கொடுக்கவும், நீயே போய் உன்னை பார்த்துக் கொள் என்று தேவன் அவர்களை அனுப்பி விட்டார். எவ்வளவு வேதனையான காரியம் பாருங்கள். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே, உங்கள் குடும்பம் ஒரு தோட்டம், உங்கள் உறவு ஒரு தோட்டம். பூமியில் பரிசுத்தவான்களின் உறவு, ஐக்கியம் ஒரு தோட்டம். அந்தத் தோட்டத்தில் தேவன் இருக்கிறாரா? வேதம் சொல்லுகிறது **யோவான் 15:1-ல் நான் மெய்யான திராட்சைச் செடி, என் பிதா தோட்டக்காரர் என்றார்.** இன்றைக்கு கர்த்தரின் தோட்டங்கள், கனிகள் நாம் தான். **ஏசாயா 5:1-ல் என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது என்றார்.** இந்த பூமியில் நாம் அவருக்கு தோட்டங்களாகவும், கனி கொடுக்கவும் தான் தேவன் நம்மை ஏற்படுத்தி இருக்கிறார். அதனால் தான் நீங்கள் கர்த்தரின் தோட்டத்தைப் போல இருப்பீர்கள் என்றார்.

இதைத்தான் **ஏசாயா 58:11-ல் அவர் சொல்லுகிறார் கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தை போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் என்றார்.** நம்மை நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் மாற்றத்தான்

தேவன் இந்த பூமிக்கு இறங்கி வந்தார். அவர் ஒரு தோட்டத்திற்கு போனார். அங்குதான் அவர் தன் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி ஜெபித்த கெத்சமனே தோட்டம். அந்தத் தோட்டத்தில் போய் கதறி அழவும், நீர்ப்பாய்ச்சவும் தன்னுடைய இரத்தத்தை சிந்தினார். அந்த சிந்தப்பட்ட இரத்தம் எந்த மனுஷனுடைய இருதயத்திற்குள் வருகிறதோ, விழுகிறதோ அவன் கர்த்தருடைய தோட்டமாக, ஏதேன் தோட்டமாக மாற வேண்டும் என்று நமக்காக வேண்டுதல் செய்தார். இன்றைக்கு அந்த சிலுவை மரணமும் கெத்சமனே தோட்டத்தின் பலனும் முள்ளுகளை அல்ல பலன் தருகின்ற தோட்டமாக மாற வேண்டும். போகட்டும் அந்தத் தோட்டத்தை எப்படி பூமியில் ஏற்படுத்தினார். நாம் எப்படி கனி கொடுக்க வேண்டும் என்பதை பார்ப்போம்.

## நம் தோட்டத்தை பண்படுத்துகிறார்

ஏசாயா 27:2,3 **அக்காலத்திலே நல்ல திராட்சை ரசத்தை தரும் திராட்சைத்தோட்டம் உண்டாயிருக்கும், கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்கு தண்ணீர் பாய்ச்சி, ஒருவரும் அதை சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும் பகலும் காத்துக் கொள்வேன் என்றார்.** நாம் நம்முடைய தோட்டமாகிய இருதயத்தில், ஆத்துமாவில் மிகுந்த கனிகளை தேவனுக்கு கொடுக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் அவருக்கு கனி கொடுத்தால் தான் அவருடைய சீஷராக, பிள்ளையாக இருக்க முடியும். அதற்குத்தான் நம்மை தேவன் நாட்டி வைத்திருக்கிறார். கர்த்தராகிய அவர் உன்னைக் காப்பாற்றி, அடிக்கடி நீர்ப்பாய்ச்சி, கொத்தி எருப்போடுகிறார். இதைப் பற்றி இயேசு லூக்கா 13 ஆம் அதிகாரத்தில் 6-9 முடிய வாசித்துப் பார்த்தால் **ஒருவன் தன் திராட்சைத் தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான், அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றும் காணவில்லை. மூன்று வருடமாய் கனியை தேடுகிறேன் ஒன்றும் காணவில்லை இதை வெட்டிப்போடு இது நிலத்தை ஏன் கெடுக்கிறது என்றான்.** ஆனால் தோட்டக்காரன் பரிந்து பேசி இந்த ஒரு வருஷம் மட்டும் இருக்கட்டும் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன் கனி கொடுத்தால் சரி இல்லாவிட்டால் வெட்டி விடலாம் என்று பரிந்து பேசினான்.

ஆம் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிந்து பேசுகிறவர் மட்டும் அல்ல, கனியற்ற வாழ்க்கையில் தேவ கோபத்திற்கு உள்ளாகும் போது, வெட்டிவிடலாம், அழித்துவிடலாம் என்று இருக்கிறபோது தமது இரத்தத்தை கையில் எடுத்து நமக்காக பரிந்து பேசுகிறார். **எபிரெயர் 12:24-ஐ வாசித்துப் பாருங்கள், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும், நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கு, இயேசு கிறிஸ்துவினிடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள் என்றார்.** ஆம் இயேசுவின் இரத்தம் நமக்காக தண்ணீராக நம்முடைய தோட்டத்திற்கு பாய்கிறது. அவருடைய வசனம் கொத்தி எருப்போடுகிறது. அனுதினமும் வேதத்தை வாசிக்கும் போது நாம் தேவ சமூகத்தில் மன்றாடி ஜெபிக்கிற போது உரமாகிய எருப்போடப்படுகிறது. இயேசுவின் இரத்தம் தண்ணீரும், வசனம் உரமாகவும் நம்முடைய நிலத்தை, இருதயத்தை பண்படுத்துகிறது. அதற்குத் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை பண்படுத்தவும், சரி செய்யவும் வந்தார்.

ஏனென்றால் நாம் அவருக்கு ஏற்ற வாழ்க்கை வாழ, நாம் அவருக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்க, நம்மை அவருடைய தோட்டத்திலே நாட்டி வைத்தார். **ஏசாயா 5:2-ஐ பாருங்கள் அவர் அதை வேலி அடைத்து, அதில் உள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குலத்**

**திராட்சைச் செடிகளை நட்டு, அதன் நடுவிலே ஒரு கோபுரத்தை கட்டி அதில் ஆலையையும் உண்டு பண்ணி அது நல்ல திராட்சைப் பழங்களை தரும் என்று காத்திருந்தார். அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது என்றார்.** நாம் இந்த பூமியில் கர்த்தருக்காக கனி கொடுப்பதற்கு பதிலாக, இனிமையான, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்கு பதிலாக, கசப்பான, விஷமான, பாவமான வாழ்க்கை வாழ்ந்து, கனியற்ற வாழ்க்கை வாழ்ந்து, அவரை கோபப்படுத்தி, துக்கப்படுத்தி, ஏமாற்றி, காலத்தையும் நேரத்தையும் வீணடித்து, வேதனைப் படுத்தியுள்ளோம். ஆண்டவரை ஏமாற்றும் வாழ்க்கையில் இவைகள் இருக்கிறது. வெளியே பார்ப்பதற்கு பளபளப்பாய் இருக்கிறது, உள்ளே அசுத்தங்களும், அருவருப்பும் நிறைந்து காணப்படுகிறது. இந்தத் தோட்டத்தை இப்படியே விட முடியாது. இதைப் பண்படுத்தவும், சீர்படுத்தவும் வேண்டும் என்று நமக்காக தன்னுடைய ஜீவனை மரணத்தில் ஊற்றினார். நம்மேல் புது இரத்தத்தைப் பாய்ச்சவும், பழையவைகளை அகற்றவும், சுத்திகரிக்கவும் நமக்காக இரத்தத்தை சிந்தினார். இனி கசப்பான கனியோ, அழுகின கனியோ இல்லாதபடி நற்கனி தரும் மரமாக, தோட்டமாக மாற்றினார்.

இதைத்தான் **எரேமியா 2:21-ல் தேவன் சொல்லுகிறார் நான் உன்னை முற்றிலும் நற்கனி தரும் உயர்குல திராட்சைச் செடியாக நாட்டினேன். நீ எனக்கு ஆகாத காட்டு திராட்சைச் செடியாக, ஆகாத கொடியாக மாறிப்போனது என்ன என்றார்.** நாம் உயர்குல திராட்சைச் செடியாக, பரிசுத்தம் உள்ள ஆரோக்கியம் உள்ள கனிகளை கொடுக்கத்தான் தேவன் நம்மை ஏற்படுத்தினார். அதற்குத்தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து, நமக்காக பாடுபட்டு, அடிக்கப்பட்டு, நம்மை நலமாக்கும், குணமாக்கும் தண்டனையை ஏற்றுக்கொண்டார். அவரால் நம்முடைய தோட்டத்தை கனி கொடுக்கின்ற தோட்டமாக மாற்ற முடியும். தேவனுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ உருவாக்க முடியும். நம்மை ஏதேன் தோட்டத்தை போலவும், கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் உருவாக்க முடியும். அதற்குத்தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து கெத்சமனே தோட்டத்தில் நமக்காக இரத்த வியர்வை வேர்த்து தண்ணீர் பாய்ச்சினார், குத்திக் கிழிக்கப்பட்டார். நம்மை சரி செய்ய, பலன் கொடுக்க இன்றைக்கு நாம் அவருடைய தோட்டமாக மாறுவோமா?, நற்கனி தரும் திராட்சைப் பழங்களைக் கொடுப்போமா? இதற்குத்தான் ஆண்டவராகிய தேவன் நம்மை அவருடைய தோட்டத்தில் வைத்தார், கனி கொடுக்கும்படி ஏற்படுத்தினார். இன்றைக்கு நாம் அவர் எதிர்பார்க்கின்ற கனிகளைக் கொடுத்து அவருடைய தோட்டத்தில் நிலைத்து நிற்போம்.

## மாதந்தோறும் புது புது கனிகள்

**நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியில் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும், அவைகளின் கனிகள் புசிப்புக்கும் அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள். எசேக்கியேல் 47:12**

நம்மை தோட்டத்தில் வைத்தார் என்றும், நாம் எப்படி கனி கொடுக்க வேண்டும் என்றும் பார்த்தோம். அடுத்ததாக நாம் எப்படிப்பட்ட கனிகளை கொடுக்க வேண்டும் என்பதை பார்ப்போம். மாதந்தோறும் புது புது கனிகளை கொடுக்க வேண்டும். ஒவ்வொரு கனிக்கு ஒரு சீசன், காலம் உண்டு. வெயில் காலத்தில் உண்டாகும் கனி, மழை காலத்தில் உண்டாகும் கனி, குளிர்காலத்தில் உண்டாகும் கனிகள்,

இவைகள் அந்தந்த நாட்களுக்குத் தக்கதாக பலனும், ஆரோக்கியமும், பாதுகாப்புமாக இருக்கும். இதை **உபா 33:14-ல் பார்க்கிறோம் சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான கனிகளாலும் சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினாலும் கனிகள் உண்டாகும்.** ஒவ்வொரு தேவபிள்ளைகளும் கொடுத்த பழைய கனிகளையே கொடுக்கக் கூடாது. புது புது கனிகள் மாதந்தோறும், சீசனுக்கு தகுந்த மாதிரி கொடுக்க வேண்டும். இதைத்தான் யோசேப்பு செய்தார் கனி கொடுத்தார். பஞ்சகாலத்தில் விளைச்சல் இல்லாத காலத்திலும், **ஆதியாகமம் 49:22-ல் பார்க்கிறோம் யோசேப்பு கனிதரும் செடி, அவன் நீர் ஊற்றண்டையில் உள்ள கனிதரும் செடி, அதன் கொடிகள் சுவரின் மேல் படரும் என்றார்.** பஞ்ச காலத்திலும், வறட்சியின் காலத்திலும், யோசேப்பு முழு எகிப்தியருக்கும், பார்வோனுக்கும் மிகுந்த இன்பமாய் இருந்தான். காரணம் அவன் நீர் அருகில் நடப்பட்டிருந்தான். **எரேமியா 17:8-ன் வார்த்தையின்படி அவன் தண்ணீரண்டையில் நடப்பட்டதும், கால்வாய் ஓரமாக தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாக இருக்கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான் என்றார்.**

ஆம் சீசன் தப்பாமல் அதினதின் காலத்தில் புதுப்புது கனிகளை கொடுக்க, வேண்டும். ஏற்கனவே கொடுத்த கனிகளை அல்ல அழுகிய கனிகளை அல்ல இனிமையான கனிகளை கொடுக்க வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் நாளைக்கு பார்த்துக் கொள்ளலாம், வயதான காலத்தில் கொடுக்கலாம் என்று அல்ல, தன் காலத்தில், ஏற்ற காலத்தில் கொடுக்க வேண்டும். **சங்கீதம் 1:3-ஐ பாருங்கள் அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கும் மரத்தை போல் இருப்பான் என்றார்.** இந்த பொல்லாத உலகத்திலே, பாடுகள் நிறைந்த உலகத்திலே, சமாதானமற்ற உலகத்திலே தேவப்பிள்ளைகள் நாம் இலையாக, மருந்தாக, ஆறுதலாக, மற்றவர்களுக்கும், நமக்கும் மாதந்தோறும் புது கனிகளைக் கொடுக்க வேண்டும். இதற்குத்தான் நம்மை திராட்சைத் தோட்டத்திலே வைத்திருக்கிறார் நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக. இன்றைக்கு இந்த செய்தியின் மூலமாக இந்த வசனத்தை கேட்கிற நாம், ஆண்டவராகிய தேவன் விரும்புகிற கனிகளைக் கொடுத்து அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வோமாக. அதனால் தான் நம்மை ஏதேன் தோட்டத்தைப் போலவும், கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் மாற்றுவேன் என்றார்.

**சங்கீதம் 92:13,15 வசனங்களில் பாருங்கள் கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப் பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள். அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள் என்றார்.** மாதந்தோறும் மட்டுமல்ல, வாழ்க்கை முழுவதும் பூமியில் உயிரோடு இருக்கும் காலம் முழுவதிலும் தேவனுக்காக கனி கொடுத்து கொண்டே இருப்போமாக. சுவையுள்ளவர்களாக, ருசியுள்ளவர்களாக, கனியுள்ளவர்களாக நம்மை மாற்றுவாராக. ஆரோனுடைய கோலைப் பாருங்கள் **எண் 17:8 இதோ லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது. அது துளிர்விட்டு, பூ பூத்து, வாதுமைப் பழங்களை கொடுத்தது.** இன்றைக்கு அதே கனிகளை நாமும் கொடுக்கும்படி ஆண்டவராகிய தேவன் அநுக்கிரகம் செய்வாராக. நீங்கள் பூ பூத்து, காய்த்து உங்கள் கனிகளால் உலகத்தை நிரப்புவீர்கள் என்றார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்கள் அருமையான கனிகளை புசிப்பாராக!



# உன் காயங்களை ஆற்றுவேன்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இன்றைக்கு நம் வாழ்வில் எத்தனையோ விதமான காயங்கள் இருக்கிறது. எங்கேயோ நாம் இடித்துக் கொள்வதால், விழுந்து விபத்து ஏற்படுவதால், மற்றவர்களால் அடிக்கப்படுவதால் காயங்கள் உண்டாகிறது. மற்றவர்கள் மனம்நோகும் அளவு பேசுவதால், நடந்து கொள்வதால் நம் மனம் காயப்படுகிறது. இப்படி ஏதோ ஒரு விதத்தில் காயப்பட்டு இருக்கிற நம்மை பார்த்து, **அவர்கள் உன்னை விசாரிப்பற்ற சீயோன் என்று சொல்லி, உனக்கு தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால் நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே 30:17** என்று வாசிக்கிறோம்.

நம்மை பார்த்து, உனக்கு எல்லாம் யார் இருக்கிறார்கள், விசாரிப்பற்ற, ஆதரவற்ற, யாரும் இல்லாதவள், தள்ளுண்டவள் என்று அவர்கள் சொல்லுகிறதினாலே நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி உன் காயங்களை ஆற்றுவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இன்னும் வேதத்திலிருந்து காயங்கள் எப்படி? எதனால்? நமக்கு வருகிறது என்று அறிந்து அதை ஆண்டவர் ஆற்றும்படி நாம் கேட்டு விடுதலை பெற்றுக் கொள்வோம்.

## உன் காயம் பெரியதாயிருக்கிறதே!

எரேமியா தன் புலம்பலில் இந்த வார்த்தைகளை சொல்கிறார். **எருசலேம் குமாரத்தியே, நான் உனக்கு சாட்சியாக எண்ணத்தை சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே நான் உன்னைத் தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர் சொல்லுவேன்? உன் காயம் சமுத்திரத்தை போல பெரிதாயிருக்கிறதே! உன்னை குணமாக்குகிறவன் யார்? புல 2:13இல் சொல்கிறார்.** எருசலேம் குமாரத்தி சீயோன் குமாரத்தி ஆகிய கன்னிகையைப் பார்த்து அதாவது நம்மைப் பார்த்து



ஆண்டவர் சொல்கிறார். உன் காயம் சமுத்திரத்தைப் போல பெரிதாயிருக்கிறதே! ஒன்றல்ல இரண்டல்ல! ஏராளமான காயங்கள் அதனால் நீ பாதிக்கப் பட்டிருக்கிறாயே! உன்னை குணமாக்குகிறவர் யார் என்கிறார். **எரே 14:17-ல் என் கண்களில் இருந்து இரவும் பகலும் ஓயாமல் கண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும். என் ஜனமென்கிற குமாரத்தியாகிய கன்னிகை மகா வேதனையுள்ள அடியினாலும், கொடிய காயத்தினாலும் சேதப்பட்டிருக்கிறாள்.** என் ஜனமென்கிற தன் குமாரத்தி ஆகிய கன்னிகையை குறித்து சொல்கிறார். என் குமாரத்தி தான்! ஆனால் காயத்தினாலும் அடியினாலும் சேதம் அடைந்திருக்கிறாள் என்கிறார். ஏன் அடி? காயம்? **யோபு 5: 17,18 இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான். ஆகையால் சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும். அவர் காயப்படுத்தி காயங்கட்டுகிறார். அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது. ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவிற்கு போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு அவனை காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப்போனார்கள் என்று லூக் 10:30,34-ல் வாசிக்கிறோம்.**



எருசலேமில் தேவ சமூகத்தில் இருக்க வேண்டியவன் எரிகோவிற்கு போனதால் கள்ளர் அவனைப் பிடித்து அடித்து காயப்படுத்தி குற்றுயிராய் விட்டு போய் விட்டார்கள். அவனுக்கு உதவுவதற்கு யாருமில்லை சமாரியன் ஒருவன் அவனைக் கண்டு மனதுருகி கிட்ட வந்து அவனுடைய காயங்களில் எண்ணையும் திராட்சை ரசமும் வார்த்து காயங்களைக் கட்டி அவனை சுய வாகனத்தில் ஏற்றி சத்திரத்திற்கு கொண்டு போய் அவனை பராமரித்தான் என்று வாசிக்கிறோம். தேவன் ஒருவரை தண்டித்தால் அவர்கள் பாக்கியவான்கள். அவர் காயப்படுத்தினால் காயங்கட்ட அவரே வருவார். அவர் அடித்தால் அவர் கையே நம்மை ஆற்றும். தாவீது இடத்தில் **சங்.89:30-33 வரை வாசித்தால் அவன் பிள்ளைகள் என் நியாயங்களின்படி நடவாமல் என் வேதத்தை விட்டு விலகி மீறி நடந்தால் அவர்கள் மீறுதலை மிலாற்றினாலும், அவர்கள் அக்கிரமத்தை வாதைகளினாலும் தண்டிப்பேன். ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும் என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன் என்றார்.** அவர் அடிக்கிறதையும் அவர் ஆற்றுகிறதையும் இந்த வசனத்தில் பார்க்கிறோம். நாம் அவரோடு இல்லாமல் உலகம், நாகரிகம் சிற்றின்பங்களில் மூழ்கி விடும் போது, அவரோடு இல்லாமல் விலகி அவர் கட்டளைகளை மீறி நடக்கிற போது சில நேரம் நம்மை சிட்சிக்கிறார். அடி வருகிறது, காயங்கள் வருகிறது, ஆனால் இயேசுவே! இதெல்லாம் உம்மை விட்டு போனதால்தான்! என்னை மன்னியும், உன் இரத்தத்தால் என்னை கழுவும், என்னை காப்பாற்றும், நான் வஸ்திரத்தை இழந்து காயப்பட்டிருக்கிறேன் என்னை குணமாக்கும் என்று ஜெபம் செய்தால் நம் காயங்களை கட்டி நம்மை குணமாக்குவார். **நீதி 20:30 காயத்தின் தழும்புகளும் உள்ளத்தில் உறைக்கும் அடிகளும் பொல்லாதவனை அழுக்கறத் துடைக்கும் இப்படிப்பட்ட காயங்கள் நம்மை அழுக்கற துடைக்கும். சங் 147:3-ல் இருதயம் நொறுங்குண்டவர்களை குணமாக்குகிறார். அவர்களுடைய காயங்களை கட்டுகிறார்.** பல நேரத்தில் நம் இருதயம் நொறுங்கிப் போகிறது.

பலரால் காயப்பட்டு போகிறது அன்னாளை பென்னினாள் அற்பமாய் பேசிக்கொண்டே இருந்தாள். எனக்கும் என் பிள்ளைகளுக்கும் இத்தனை பங்குகள் கிடைத்திருக்கிறது. உனக்கு ஒரு பங்கு தானா? உனக்குத்தான் பிள்ளை இல்லையே என்றிருந்திருப்பாள். நாள்தோறும் மனமடிவாக்குவாள். இருதயம் நொறுங்கி போகும். ஆகார் தான் கர்ப்பம் ஆனதும் சாராளை அற்பமாக எண்ணினாள். மற்றவர்கள் அற்பமாய் எண்ணுவதும், ஏளனம் பேசுவதும், கடினமாய் பேசுவதும், நிந்தித்து அவமானப்படுத்துவதும், நம் உள்ளத்தை உடைத்து காயப்படுத்துகிறது. யோபுவுக்கு ஏற்கனவே பழைய இழப்புகள், பாடுகள், வியாதி இவற்றின் நடுவில் ஆறுதல் சொல்ல வந்த நண்பர்கள் ஏற்கனவே காயப்பட்டு இருக்கிற அவனை இன்னும் நோகடித்தார்கள். ஆனால் ஆண்டவர் அவனை காயங்கட்டி குணமாக்கினார்.

## யாருக்கு காரணமில்லாத காயங்கள்

தேவனே காயப்படுத்தினால் அவர் கட்டி விடுவார். ஆனால் பல நேரங்களில் காரணம் இல்லாத காயங்கள் நமக்கு வருகிறது. **நீதி 23:29,30 ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்கு சண்டைகள்? யாருக்கு புலம்பல்? யாருக்கு காரணம் இல்லாத காயங்கள்! யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள். மதுபானம் இருக்கும் இடத்திலேயே தங்கி தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்கும்தானே!** சாலமோன் ஞானி எழுதுகிறார் இதுவரை இல்லாத அளவு மதுபானங்கள் போதை வஸ்துகள் பயன்பாடு அதிகமாகி கொண்டே போகிறது. இது கலாச்சார சீரழிவு, பெண்களும் குடிப்பது போதையை போடுவது நாகரிகமாக நினைக்கிறார்கள். இதில் பெரியவர்கள் தலையிடக்கூடாது எங்கள் சுதந்திரம் என்கிறார்கள். பெற்றோர் என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கிறார்கள். **மதுபானம் அமளி பண்ணும் அதனால் மயங்குகிற ஒருவனும் ஞானவான் அல்ல. நீதி 20:1**-ல்சொல்கிறது. இவர்களுக்கு காரணம் இல்லாத காயங்கள்.

இன்னும் வேசியின் ஆடை ஆபரணங்களை தரித்த, தந்திரமுள்ள ஒரு ஸ்திரீயின் வீட்டு வழியாய் ஒரு புத்தியீனமான வாலிபன் நடந்தபோது அவள் தன்னிடத்தில் வரவழைத்தாள். **நீதி 7: 26இல் அவள் அநேகரை காயப்படுத்தி விழப் பண்ணினவள். பலவான்கள் அநேகரை கொலை செய்தாள் என்று வாசிக்கிறோம்.** இன்றைக்கு இவ்விதமான வாழ்க்கை வாழ்கிற பெண்களால் எத்தனை குடும்பங்களில் பிரச்சனை! எத்தனை பெண்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். வாலிபர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட வேசித்தன ஆவி உள்ள ஆண்களால் பெண்களும் பாதிக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டு உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்டு நடந்ததை எண்ணி எண்ணி வேதனையோடு இருக்கிறார்கள்.


**உன் 5:7 தேவனை தேடுவதால் வருகிற காயங்கள் நகரத்தில் திரிகிற காவலாளர் என்னை கண்டு, என்னை அடித்து, என்னை காயப் படுத்தினார்கள். அலங்கத்தின் காவற்காரர் என் மேலிருந்த என் போர்வையை எடுத்துக் கொண்டார்கள்** என்று சூலமித்தியாள் சொல்கிறாள். நேசரை தேடிப்போனதால் காவலாளர்களால் அடித்து காயம் ஏற்படுகிறது. இன்றைக்கு பாருங்கள் சரியான குற்றவாளிகளை விட சந்தேகத்தில் அடிக்கப் படுகிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்காக அடிக்கப்படுகிறவர்களும் உண்டு. எந்தத் தவறும் செய்யாமல் நன்மை செய்து மட்டுமே பாடுபடுகிறவர்கள் உண்டு.

இஸ்ரவேலின் ராஜா யோசியா கர்த்தருடைய பார்வையில் செம்மையானவைகளை செய்து பஸ்காவை சிறப்பாய் ஆசரித்தான். தேவாலயத்திற்கு அடுத்த காரியத்தை திடப்படுத்தின பிறகு எகிப்தின் ராஜாவாகிய நேகோ என்பவன் யுத்தத்திற்கு போகிறபோது இந்த யோசியா எதிர்த்து யுத்தம் செய்யப் போனான். அதற்கு நேகோ எனக்கும் உனக்கும்

என்ன? வேறொருவனோடே நான் யுத்தத்திற்கு போகிறேன் என்றான். ஆனால் யோசியா கேட்கவில்லை. யுத்தம் செய்யப்போனபோது **வில்வீரர் யோசியாவின் மேல் அம்பெய்தார்கள். அப்பொழுது ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி என்னை அப்புறம் கொண்டு போங்கள். எனக்கு கொடிய காயம்பட்டது என்றான். 2 நாளா 35:23** தேவையில்லாத காரியத்தில் தலையிட்டு சுயமாய், தேவன் இந்த யுத்தம் செய்ய சொல்கிறாரா? என்று கூட யோசிக்காமல் செயல்பட்ட யோசியா காயப்பட்டு மரணம் அடைந்து விட்டான். இன்னொரு ராஜா ஆகாப் கர்த்தருக்கு எதிர்த்து நடக்கிறவன், அவனுடைய யோசபாத் நட்பு வைத்திருந்தான். கிலேயாத்திலுள்ள ராமோத்துக்கு போகிறேன் வருகிறீரோ என்றான். யோசபாத் தெய்வ பயத்தோடு கர்த்தருடைய வார்த்தையை கேட்டு விசாரியும் என்றபோது மிகாயா என்ற தீர்க்கதரிசி மூலமாய் போக வேண்டாம். இஸ்ரவேலர் எல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளை போல மலைகளில் சிதறடிக்கப்பட்டதை கண்டேன். நீ சமாதானத்தோடு திரும்பி வருவதில்லை என்று அவன் சொன்ன போதும், தான் ஒரு முடிவு செய்துவிட்டு கர்த்தர் தடுத்தும் மீறி நடந்தான். கூட போன யோசபாத் நண்பனுக்காக வேஷம்மாறி சாகத்தெரிந்தான். கூக்குரலிட்டு தப்பித்தான். சிரியா ராஜா இஸ்ரவேலின் ராஜாவுடைய மாத்திரம் யுத்தம் பண்ணுங்கள் என்று சொல்லி இருந்தான். **2 நாளா 18:33 ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான். அது இஸ்ரவேலின் ராஜாவினுடைய கவசத்தின் சந்தை கிடையிலே பட்டது. அப்பொழுது தன் சாரதியைப் பார்த்து நீ திரும்பி ராணுவத்துக்கப்பால் கொண்டு போ! எனக்கு காயம் பட்டது என்றான்.** ஆண்டவரின் வார்த்தையை மீறி எதிர்த்து நடந்த ஆகாப் காயப்பட்டு மரணமடைந்தான்.

பிசாசினால் காயம் அடைந்தவர்கள் உண்டு. **மாற் 5:2-5 அசுத்த ஆவி உள்ள ஒரு மனுஷன் பிரேத கல்லறைகளில் இருந்து புறப்பட்டு வந்தான். கல்லறை தான் அவன் வாழ்க்கையாக இருந்தது. அவனை அடக்க ஒருவராலும் கூடாது இருந்தது. சங்கிலிகளை முறித்து விலங்குகளை தகர்த்து போடுவான். அவன் இரவும் பகலும் மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து கூக்குரலிட்டு கல்லுகளினாலே தன்னை காயப்படுத்திக் கொண்டிருந்தான்.** இயேசு அவனை விட்டு அந்த அசுத்த ஆவியை துரத்தினார். அவன் விடுதலையடைந்தான்.

பவுலும் சீலாவும் தேவ ஊழியத்தைச் செய்த போது குறி சொல்லுகிற ஒரு ஆவியை உடைய ஒரு ஸ்திரீ உன்னத தேவனுடைய ஊழியர் இவர்கள். இரட்சிப்பின் வழியை அறிவிக்கிறார்கள் என்று கூச்சலிட்டபோது பவுல் அந்த அசுத்த ஆவியை துரத்தினான். அதனிமித்தம். வருமானத்தில் பாதிக்கப்பட்டு போனவர்கள் பவுலையும் சீலாவையும் **அப். 16:23 அவர்களை அநேக அடிகள் அடித்த பின்பு சிறைச்சாலையில் வைத்து அவர்களை பத்திரமாய் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்கு கட்டளையிட்டார்கள்.** ஆனால் பவுலும் சீலாவும் கர்த்தரை பாடி ஜெபம் பண்ணினபோது கர்த்தர் சிறைச்சாலை கதவுகளை திறந்தார். காவற்காரனை இரட்சித்தார். அவன் பவுலை வீட்டிற்கு அழைத்து போய் காயங்களை கழுவினான். இப்படி பிசாசின் தாக்குதலினால் பலர் காயப்பட்டு வேதனையோடு இருக்கிறதை பார்க்கிறோம். பவுலின் காயங்கள் நீங்கி கர்த்தருக்கு மகிமையான ஊழியத்தை அவன் செய்தான். பிசாசினால் நீங்கள் கூட பாதிக்கப்பட்டு தங்களை தாங்களே கீறி கொள்வது போல என்னால்



ஒரு பிரயோஜனம் இல்லை நான் அழகில்லை எனக்கு படிப்பு இல்லை எனக்கு வசதி இல்லை இப்படி சொல்லிக் கொண்டே இருக்கிறீர்களா? உங்களை விடுவிக்க இயேசு உங்கள் அருகில் இருக்கிறார். மற்றவர்களை பிசாசு தூண்டி உங்களை காயப்படுத்தினாலும் பவுலையும் சீலாவையும் காப்பாற்றி வெளியே கொண்டு வந்தவர் உங்களையும் தப்புவிப்பார்.



## இயேசு நமக்காக காயப்பட்டார்

நாம் இவ்வளவு காரியங்களில் கடந்து போகிறவர்களாய் இருக்கும்போது நமக்காக ஒருவர் காயப்பட்டார். அவர் இயேசு கிறிஸ்து. **ஏசா 53:5-ல் நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் (இயேசு) காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்** என்று ஏசாயா எழுதுகிறார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக, சாபங்களுக்காக, வியாதி, பலவீனம், துக்கம், பாடுகள் இவைகளுக்காக சிலுவையை ஏற்று அத்தனை அடிகளையும் காயங்களை தன் மேல் சுமந்து கொண்டு நம்மை விடுதலையாக்குகிறார். உங்கள் காயங்கள் ஏதினால்? எவ்வளவு பெரிதாய் இருந்தாலும் அவரை உங்களை குணமாக்குவார். ஏனென்றால் அதை அவர் ஏற்றுக் கொண்டார். இயேசு உயிர்த்தெழுந்த பின்பு சீஷர்களுக்கு தோன்றினார். அப்பொழுது தோமா இல்லை. **மற்ற சீஷர்கள் சொன்ன போது ஆண்டவரை கண்டோம் என்று சொன்னாலும் யோவா 20:25 அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்த காயத்திலே என் விரலை இட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றார்.** இயேசு இந்த தோமாவிற்காகவே மறுபடியும் வந்து **27ஆம் வசனத்தில் நீ உன் விரலை நீட்டி என் கைகளைப் பார். உன் கையை நீட்டி என் விலாவிலே போடு அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்.** தம் காயங்களை தோமாவிற்கு காண்பித்ததினிமித்தம் தான் இந்தியா வந்து நமக்கு இந்த நற்செய்தியை கொண்டு வந்தார். நம்மையும் தோமாவை போலவே அழைக்கிறார். நாம் பல நேரங்களில் விசுவாசிக்க மாட்டேன் என்று சொல்கிறோம். நமக்காக தம்முடைய காயங்களை காட்டி விசுவாசிக்க வைத்து **இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு நீ போய் காயம் கட்டுதலை கூறு என்று அபிஷேகம் செய்கிறார். ஏசா. 61:1.** இந்த சுவிசேஷத்தை நல்ல செய்தியை கூறு இயேசு உனக்காக காயப்பட்டார். உன் காயத்தை ஏற்றுக் கொண்டு உன் காயத்தை ஆற்றுவார். மனங்கலங்காதே என்று சொல்ல அன்போடு நம்மை அழைக்கிறார். **ஓசி 6:1 கர்த்தர் இடத்தில் திரும்புவோம் வாருங்கள். நம்மை பீறினார். அவரே நம்மை குணமாக்குவார். நம்மை அடித்தார் அவரே நம்முடைய காயங்களை கட்டுவார் என்கிறார்.** அவரே நம் காயங்களை கட்டுகிறவர் குணமாக்குகிறவர் காயங்களை ஆற்றுகிறவர். நம் ஆண்டவர் தாமே எதினால் நாம் காயமடைந்திருந்தாலும் நம் காயங்களை ஆற்றி குணமாக்கி நம்மை நிலை நிறுத்துவாராக!

## கோவையில் நடைபெற்ற

# லெந்து கால கன்வென்ஷன் கூட்டம்

கோவை மாவட்டம் உப்பிளிப்பாளையம் சி.எஸ்.ஐ தூய இம்மானுவேல் ஆலயத்தில் வைத்து மார்ச் 6,7,8 தேதிகளில் நடைபெற்ற கன்வென்ஷன் கூட்டத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். ஆயிரக்கணக்கான மக்களை தேவன் அழைத்து வந்தார். அவர்கள் ஆவி ஆத்துமா சரீரத்தில் விடுதலையைத் தந்து அவர்களை சாட்சிகளாக மாற்றினார். கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் என்ற வேதவார்த்தையின்படி கர்த்தர் தம்முடைய ஆவியை அளவில்லாமல் பொழிந்தருளினார். நம் சகோதரி. கலா வின்செண்ட்ராஜ் அவர்கள் பாடல் ஆராதனை மூலம் ஜனங்களை இன்னும் அதிகமாக தேவ பிரசன்னத்திற்குள் நடத்தினார்கள். நம் சகோதரர். வின்செண்ட்ராஜ் அவர்கள் தேவனுடைய மகத்துவங்களை விளக்கிச் சொல்லும் ஆழமான சத்தியத்தின் மூலம் தேவ அன்பையும், தேவன் நமக்காக செய்த அத்தனை கிரியைகளையும் சொல்லி ஜனங்களை தேவனுடைய சித்தத்திற்கு நேராக நடத்தினார்கள். மேலும் இந்த கடைசி காலத்தில் தேவனுக்காக வைராக்கியமாக செயல்படுகிறவர்களாக இருக்க வேண்டும், அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதை ஆவியானவர் சகோதரர் மூலமாக தெளிவு படுத்தினார். இயற்கை சூழ்நிலையை சாதகமாக்கி, தேவைகளை சந்தித்து, ஜனங்களை அவரில் பெலனடையச் செய்த தேவனுக்கு எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக.


















வானத்தின் வாசலில் நடைபெற்ற

# ஆசீர்வாத உபவாச ஜெபம்













தேவனுடைய கிருபையினால் ஒவ்வொரு மாதமும் நமது வானத்தின் வாசல் ஜெப மையத்தில் வைத்து நடைபெறும் ஆசீர்வாத உபவாச ஜெபங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். ஒவ்வொரு முறையும் புதிய ஆத்துமாக்கள் அநேகரை தேவன் அழைத்து வந்து அவர்கள் தம்மை அறிந்து கொள்ளவும் தமக்காய் வாழவும் வைக்கிறார். மேலும் தம்மைப் பற்றி அநேகருக்கு சொல்லவும் அவர்களை சாட்சியாக மாற்றுகிறார்.

நம் சகோதரர் வின்செண்ட் ராஜ், சகோதரி கலா வின்செண்ட் ராஜ் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தி அவர்கள் மூலம் பலத்த கிரியைகளை வெளிப்படுத்தினார். மேலும் ஜெபத்திற்கு வந்த ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய ஆகாரம் மட்டுமல்ல, சரீர பிரகாரமான ஆகாரமும் கொடுக்க தேவன் கிருபை செய்து வருகிறார். அவருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.



# நம்பினவர்களுக்கு நன்மை செய்தார்

## சகோதரி. ஜான்சிராணி - அனுமந்தராயன் கோட்டை

எனக்கு திருமணமாகி இரண்டு வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்தேன். 2020 ஆம் வருடம் வானத்தின் வாசலில் நடைபெற்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு, பொருத்தனை பண்ணி ஜெபித்தேன். கர்த்தர் எனக்கு ஒரு ஆண் குழந்தையை தர வேண்டும் என்று ஜெபித்து விட்டுச் சென்றேன். கர்த்தரிடம் நான் கேட்ட என் மனவிருப்பததின்படியே எனக்கு ஒரு அழகான ஆண் குழந்தையை 2021 ஆம் வருடம் கொடுத்தார். கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

## சகோதரி. அனிதா - திண்டுக்கல்

நான் கடந்த பத்து வருடங்களாக தற்காலிக செவிலியராக பணிபுரிந்து வந்தேன், எனக்கு பிரமோஷன் கிடைக்கவில்லை. ஒவ்வொரு மாதமும் வானத்தின் வாசலில் நடைபெறும் ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் வந்து இந்த காரியத்திற்காக ஜெபிப்பேன். ஒருநாள் நான் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது உங்களுக்கு நிரந்தர வேலைக்கான கலந்தாய்வு இருக்கிறது வாருங்கள் என்று சொன்னார்கள். அப்படியே திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு அவர்கள் என்னை தேர்வு செய்தார்கள், பொதுவாக எல்லாருக்கும் வெளியூர்களில் தான் வேலை தருவார்கள். ஆனால் கர்த்தர் எனக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலேயே நிரந்தர செவிலியராக வேலை கிடைக்கச் செய்தார். ஒரு நொடி பொழுதில் என் வாழ்க்கையில் அற்புதம் செய்து என்னை சாட்சியாக வாழ வைத்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.

## சகோதரி. ஜூலி - மதுரை

இரண்டு வருடங்களாக எனக்கு உடம்பு வலி அதிகமாக இருந்தது. இரவு நேரங்களில் என்னால் தூங்க முடியாது. சிடி ஸ்கேன், எம்ஆர்ஐ ஸ்கேன் எல்லாம் எடுத்தும், செக் பண்ணி பார்த்தும் எந்த பிரச்சனையும் இல்லை, எல்லாம் நார்மலாக இருக்கிறது என்று மருத்துவர்கள் சொன்னார்கள். ஆனால் உடம்பு வலி இருந்து கொண்டே இருந்தது. ஒரு நாள் என் கணவர் மதுரையில் நடைபெற்ற எழுப்புதல் உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள என்னை அழைத்து வந்தார். கூட்டம் முடிந்தவுடன் சகோதரரிடம் ஜெபிக்க கூட்டி சென்றார். சகோதரர் அவர்கள் என் தலை மேல் கை வைத்தவுடன் நான் கீழே விழுந்து கத்தி அழுதேன். அன்றிலிருந்து இன்று வரை அந்த உடம்பு வலி எனக்கு இல்லை. நான் நல்ல சுகத்தோடு, பெலத்தோடு இருக்கிறேன். கர்த்தர் எனக்கு பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை கொடுத்தார் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு

இணைந்து

# சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன்,
தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமையமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

**1. BANK TRANSFER**

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI, MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | : L. VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0000109 |

**2. இணையதளம் (WEBSITE)**

WWW.JESUSLIVES.IN

**3. காசோலை (CHEQUE):**

JESUS LIVES TRUST (OR)
L.VINCENT RAJ

**4. GOOGLE PAY :**

GPAY TO: 944 300 9333

**5. மணியார்டர் (E.M.O)**

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை,
மதுரை - 625 402.

**6. Whatsapp மூலம்**

9442800449 என்ற எண்ணிற்கு Donate என்று டைப் செய்து அனுப்பி whatsapp மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை செலுத்தலாம்.

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 2800 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# அறிகுறிகளே இல்லாமல் மது அருந்தாதவர்களையும் தாக்கும் 'கல்லீரல் நோய்'



உலகம் முழுவதும் ஆயிரத்தில் 47 பேருக்கு ஆல்கஹால் அல்லாத கொழுப்பு கல்லீரல் நோய். இது பெண்களை விட ஆண்களிடையே அதிகமாக காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆல்கஹால் அல்லாத கொழுப்பு கல்லீரல் நோய் என்று அழைக்கப்பட்ட வளர்சிதை மாற்ற செயலிழப்பு கல்லீரல் நோய் உடல் பருமன், வகை 2 நீரிழிவு மற்றும் இதய நோய்களுடன் தொடர்புடைய, கல்லீரலில் தேவையற்ற கொழுப்பு சேரும் நிலை. இது கல்லீரல் அழற்சி வடுக்கள், மற்றும் சில நேரங்களில் கல்லீரல் புற்றுநோய்க்கும் கூட வழிவகுக்கும் ஒரு தீவிரமான நிலையாக உள்ளது. இது கல்லீரல் புற்றுநோய் அல்லது கல்லீரல் செயலிழப்புக்கு வழிவகுக்கக் கூடும்.

### கல்லீரல் என்ன செய்கிறது?

நம் உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் ஒரு குறிப்பிட்ட வேலையை மட்டும் செய்கின்றன. இதயம் இரத்தத்தை பம்ப் செய்கிறது. நுரையீரல் ஆக்சிஜனை எடுத்துக்கொள்கிறது. ஆனால் கல்லீரல் மட்டும் 500-க்கும் மேற்பட்ட வேலைகளை செய்கிறது. "வேறு எந்த உறுப்பும் இந்த அளவுக்கு சிக்கலான பணிகளை மேற்கொள்வதில்லை. கல்லீரல் இல்லாவிட்டால் உட்கொண்ட உணவு ஜீரணமாகாது; உயிர் வாழ்வதே சாத்தியமில்லை,"

### ஆல்கஹால் அல்லாத கொழுப்பு கல்லீரல் நோய் எப்படி வருகிறது?

ஆல்கஹால் அல்லாத கொழுப்பு கல்லீரல் நோய் இன்று "வளர்சிதை மாற்ற நோய்க்குழுமம்" என்று வகைப்படுத்தப் படுகிறது. மது அருந்துதல், துரித உணவு, அதிக கலோரி உள்ள உணவுகளை உட்கொள்ளுதல், உடல் ரீதியாக பெரியளவில் இயக்கம் இல்லாமலிருப்பது. புகைப்பிடித்தல், தூக்கமின்மை ஆகியவை சேர்ந்து கல்லீரலை படிப்படியாக பாதிக்கின்றன.

### நோய்க்கான அறிகுறிகள் என்ன?

கொழுப்பு கல்லீரலின் மிகப்பெரிய சிக்கல் அவை எந்த அறிகுறிகளையும் வெளிப்படுத்தாது. சோர்வு, உற்சாகமின்மை போன்றவை காணப்படலாம்.

### யாருக்கு அதிக ஆபத்து?

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பிஎம்ஐ 23-க்கு மேல் உள்ளவர்கள், வயிறு பெரிதாக இருப்பவர்கள் மது அருந்துபவர்கள் ஆகியோர் கல்லீரல் பரிசோதனையை கட்டாயம் செய்துகொள்ள வேண்டும். அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் மற்றும் ஃபைப்ரோ ஸ்கேன் மூலம் கல்லீரலின் நிலையை துல்லியமாக அறிய முடியும் என்பதால் ஆண்டுக்கு ஒரு முறை இந்த பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். "ஆல்கஹால் அல்லாத கொழுப்பு கல்லீரல் நோய் என்பது நீரிழிவு நோய், உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம் அல்லது இடது வென்ட்ரிக்கிள் சுவர் தடிமன் அதிகரிப்பு உள்ள நோயாளிகளில் ஒரு பொதுவான இணை நோயாக கண்டறியப்பட்டுள்ளது

### கல்லீரல் கொழுப்பு ஆபத்தான நிலைக்கு போனால் என்ன ஆகும்?

கல்லீரல் கொழுப்பைக் கண்டுகொள்ளாமல் விட்டால், நார்த்திசு மாற்றத்துக்கு வழிவகுக்கும். அதன் அடுத்த நிலையான சிரோசிஸ் நிலை வந்தால் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே வழி

### கல்லீரலை ஆரோக்கியமாக வைக்க என்ன செய்யலாம்?

கல்லீரல் ஆரோக்கியத்துக்கு சரியான உணவுப் பழக்கவழக்கம் மிக அவசியம். 1,500 கலோரி மட்டும் தேவைப்படும் நேரத்தில் 3,000 கலோரி சாப்பிட்டால், மிகுதியான கலோரிகள் கொழுப்பாக மாறி கல்லீரலில் படிகின்றன. அது மட்டுமல்ல, வயிற்றைச் சுற்றியும் உள் உறுப்புகளிலும் கொழுப்பு படிய தொடங்கும். "100 கலோரி எரிக்க ஜிம்மில் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். ஆனால் சாலையோரம் ஒரு சின்ன இனிப்பு சாப்பிட்டாலே 100 கலோரி நம் உடலில் சேர்ந்துவிடும். நாம் சாப்பிடுவதை உணர்வுடன் கவனித்து சாப்பிடும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வது அவசியம்," "காய்கறிகளை அதிகமாகவும் சாதத்தை குறைவாகவும் சாப்பிட வேண்டும். வெள்ளை சர்க்கரை, மைதா போன்ற எளிய மாவுச்சத்துகளை விட்டு கைக்குத்தல் அரிசி, கோதுமை போன்ற சிக்கலான மாவுச்சத்துகளை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆன்டிஆக்சிடன்ட் நிறைந்த உணவுகளை தினசரி எடுத்துக்கொள்வதும் கல்லீரலை பாதுகாக்கும்.



மதுரையில்
எழுப்புதல்
உபவாச ஜெபம்
2026 ஏப்ரல்
18
காலை 9.30
மணி முதல்
மதியம் 2.30
மணி வரை
(மூன்றாவது சனிக்கிழமை)
EVG. L. வின்சென்ட்ராஜ்
EVG. T. ஸ்டிபன்
EVG. கலா வின்சென்ட்ராஜ்
இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், PRC டிப்போ அருகில், மதுரை மாவட்டம்.
தொடர்புக்கு: 94428 00449, 94980 00449

RNI NO. TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023




**உங்கள் வருகையை முன் பதிவு செய்ய:**

1. தொலைபேசி மூலமாக **9498000449, 9442800447, 9442800449**
2. வாட்ஸ் அப் மூலமாக **9498000449** என்ற Whatsapp எண்ணிற்கு "**REGISTER**" என்று டைப் செய்து அனுப்பி உங்கள் வருகையை முன் பதிவு செய்யலாம்.
3. இணையதளம் மூலமாக **soe.jesuslives.in**

TO,

**If Undelivered**
**(Please Return to)**

**YESUVAI THINAM PARKIREN**
54, A.I.B.E.A. Nagar, Paravai,
Madurai - 625 402.
Tamil Nadu, South India.